தேதி: 26-04-2022

O.S. No.389/2014

பி.வ.சா.1 திரு.எல்லத்துரை

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வழக்குச் சொத்தும், அதை ஒட்டியுள்ள 46 செண்ட் நிலத்தையும் சேர்த்து சர்வே எண். 611/8 என்று பட்டா 1019 என்ற எண்ணில் வழங்கப்பட்டது என்றால் சரி. பட்டா கருப்பண விருதுள்ளார் மகன் பெருமாள், காளியப்ப விருதுள்ளார், பரமசிவம் மனைவி காளியம்மாள் ஆகியோர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 நீங்கள் ஆவணமாக தாக்கல் செய்து தற்போது மறுக்கிறீர்கள் என்றால் சரியல்ல. பட்டாவில் உங்கள் பெயரை மாற்றம் செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் வழக்கு சொத்து 46 செண்டில் 23 செண்ட் நிலத்திற்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது. 23 செண்ட் நிலத்திற்குரிய பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்யவில்லை. 23 செண்ட் நிலம் உட்பிரிவாகியுள்ளதா என்றால் உட் பிரிவாகியுள்ளது. அதன் உட்பிரிவு எண் என்ன என்றால் தெரியாது, நியாபகமில்லை. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு உட்பிரிவு செய்யப்பட்டது. நீங்கள் பொய்யாக சொல்கிறீர்கள், 92 செண்டும் ஒரே நிலமாக ஒரே பட்டாவாக தற்போதும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 647, 146 பட்டாக்கள் குறித்து வரி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. பட்டாவை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்யச் சொல்லி நான் கொடுத்துவிட்டேன். உங்கள் தகப்பனார் பெயரிலோ, பெரியப்பா பெயரிலோ பட்டா வழங்கப்படவில்லை என்றால் என்னுடைய தகப்பனார் ஆறுமுகம் காலமாகிவிட்டதால் பட்டா எங்களுடைய நான்கு பேர் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். உங்கள் பெரிய தகப்பனார் கே.சண்முகம் 1-ம் பிரதிவாதி பாலசமுத்திரம் பேரூராட்சியில் கிளார்க்காக பணியில் இருந்தார் என்றால் நான்கு ஆண்டுகள் மட்டுமே அங்கு இருந்தார், அதன் பிறகு அய்யம்பாளையத்தில் வேலை பார்த்தார். உங்கள் தகப்பனார் சண்முகம் அவர் கிளார்க்காக இருந்து வருவதை பயன்படுத்தி வரி ரசீதுகள் தயார் செய்து வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் குடியிருக்கும் இடத்திற்கு உங்கள் பெயரிலோ, உங்கள்

தகப்பனார் பெயரிலோ வீட்டு வரி ரசீதுகள் உள்ளதா என்றால் வீட்டு வரி ரசீதுகள் இல்லை, கிஸ்தி ரசீதுகள் உள்ளது. வழக்கு சொத்தில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது. அதன் எண்கள் எனக்கு நியாபகமில்லை. மின் இணைப்புகள் 1-ம் பிரதிவாதியின் பெயரில் இருக்கிறது. குடிநீர் இணைப்பும் 1-ம் பிரதிவாதி பெயரில் தான் இருக்கிறது. சொத்து புன்செய் நிலம், வீட்டிற்கு மட்டும் தான் வரிவிதிப்பு செய்யப்படும், அதனால் நிலத்திற்கும் சேர்த்து வரிவிதிப்பு வழங்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. உங்கள் பெரிய தகப்பனார் மற்ற வாதிகளிடமிருந்து அவர்களுடைய விகிதாச்சாரப்படி அவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு அவர்களுக்காக வீட்டு வரி செலுத்தி ரசீது வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 2017-ம் ஆண்டிற்கு பிறகு வரி செலுத்தியுள்ளீர்களா என்றால் செலுத்தியுள்ளேன், அந்த ரசீதுகள் என்னிடம் உள்ளது, அதை சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். 1-ம் வாதி சுப்புலட்சுமிக்கும், 4-ம் வாதி காளியம்மாளுக்கும் 1962, 1972-ம் ஆண்டுகளில் சீர் வரிசைகள் செய்து கருப்பண விருதுள்ளார் திருமணம் செய்து வைத்தார் என்று வழக்கில் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் அப்போது நீங்கள் பிறக்கவில்லை, உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி, எனக்கு நேரடியாக தெரியாது, சுப்புலட்சுமி தான் என்னிடம் கூறினார். இவ்வாறு நீங்கள் கூறுவது செவிவழி தகவல் இதை சாட்சியாக ஏற்கமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்றும், உங்கள் தாயார் மற்றும் சகோதரிகளை சேர்க்காமல் குடும்ப தலைவர் என்று உங்கள் பெயரை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி சரியானது என்றால் சரியல்ல, நான்கு பேர் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. உங்கள் தாயார், சகோதரி, சகோதரர் ஆகியோர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினராக சேர்க்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் பிரதிவாதிகள் மூவரும் 45 ஆண்டுகளாக வீடு கட்டி அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளீர்கள் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தொடர்ச்சியாக நீங்கள் மூவரும் மட்டுமே அனுபவித்து வந்தாலும் மற்ற பங்கு தாரர்களுக்கும் சேர்த்து தான் நீங்கள் அனுபவித்து வருவதாக கருத முடியும் என்று சொன்னால் சரியல்ல. 46 செண்ட் நிலம் உங்களுடைய தனித்த அனுபவத்தில் இல்லை, அது வாதி, பிரதிவாதிகளில் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள படி அவர்களுக்கு பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. கருப்பண விருதுள்ளாரின் ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்தில் பாகம் உள்ளது என்று பொய்யாக எதிர்வாதம்

செய்கிறீர்கள் என்றால் சரியல்ல, கருப்பண விருதுள்ளாரின் விருப்பப்படி ஆண் வாரிசுகள் அடைந்து அனுபவித்து வருகிறோம். நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4, 5 ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள், வீட்டு வரி ரசீதுகள், குடிநீர் வரி ரசீதுகள் ஆகியவை வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள், இவை வழக்கில் உங்களுக்கு சான்றாவணங்களாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள படி அவர்களுக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

K HARIHARAN

Digitally signed by K HARIHARAN
Date: 2022.04.28 09:50:14 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**

**பழனி.**